2 அணா

மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை | 21—1—55 | வெள்ளி | ஒலி 43

ஏன் மறந்தீர்? இந்த இலட்சிய தீபத்தை எப்படி மறந்தீர்?

யார் இந்தச் சிறுமி?

காங்கிரஸ் கட்சிக்கு கால்கோள் விழாசெய்து வைத்த தாகச் சொல்லப்படும் திவான் பகதூர் ரகுநாதராவின் சொந்தக் காரியா?

இல்லை; இல்லை.

சத்தியமூர்த்தி அய்யரின் பேரக் குழந்தையா?

இல்லை; இல்லை.

சீனுவாச அய்யரின் கொள் ளுப் பேத்தியா?

இல்லை; இல்லை.

பின்னர் யார்தான் இந்தக் குழந்தை?

நேருவின் முடிவிற்கு தலை யசைக்க ஆட்டு மந்தையைப் போல ஆவடிக் கிராமத்தில் குழுமியிருப்போரே! இந்தச் சிறுமி யார் தெரியுமா?

காய்ந்துபோன வயிற்றை நிறப்ப-சாய்ந்துவிட்ட வாழ்வை நிமிர்க்க—தாய்நாடு விட்டு அடி மைகளாய், கூலிகளாய், குமு றும் நெஞ்சோடு அலைகடல் தாண்டிய தமிழினத்தைச் சார்ந்தவள்!

"அண்டியவருக்கு வாழ் வளித்து, எம்மையெல்லாம் காரி உமிழ்ந்துவிட்ட தமிழகமே! சாவகத்தில், யவனத்தில், ரோம சாம்ராஜ்யத்துத் தாழ்வாரத்தில் முத்தமிழ்ப் பண்ணிசைத்த எந் தன் தாயகமே! இன்று ஏன் எங்களை விலங்குகளாய். வியா பாரப் பொருள்களாய், தேயிலை யின் காம்பு கொய்ய தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பி வைக்கிறாய்?" என்று தேம்பி அழுதபடி கப்பலேறிய தமிழ்த் தங்கை!

போட்டோ : எம். பைன், ஜோகன்பர்க், தென் ஆப்பிரிக்கா.

நமக்கெல்லாம் நினைவிருக்கும்; தேசியத் தோழர்களுக்கு பெய ரைக் குறிப்பிட்டால்கூட நினை வுக்கு வராது. அந்த செந் தமிழ்ச் சிட்டு வேறு யாருமல்ல. வெந்தணலாய் வெள்ளையர் வீசி டும் அடக்குமுறை பாணங்கள் பாய்ந்து வந்தபோதும், அதை ஒழித்திடும் வரை கண்துஞ் சேன் — என சபதம் செய்து கிளம்பிய தில்லையாடி வள்ளி யம்மைதான் இப்படி காட்சி தருகிறாள்.

பதினாறே வயதுதான் அவ ளுக்கு! மண்வீடு கட்டி, மரப் பொம்மை வைத்து, வாழ்க்கை விளையாட்டு நடத்திய காலத்தை கனவிலே நினைத்து மகிழ்ந்தபடி, குடும்ப விளக்காய் நின்று ஒளி தர வேண்டிய பருவம்! அந்த நேரத்திலேதான் காந்தியாரோடு சத்தியாகிரகம் செய்து தென் ஆப்பிரிக்கா சிறையிலடைக்கப் பட்டாள்! மீண்டு வந்ததும் சிறை அளித்த நோய் காரண மாக இறந்துபோகும் நிலையை அடைந்தாள். அந்த நேரத்தி லும்கூட காந்தியாரிடம், 'இப் போது என்னைக் கைதியாக்கினு லும் சிறைக்குப் போக நான்

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

ஆங்கில ஏகாதிபத்யம் ஒழிந்து

வடநாட்டு ஏகாதிபத்யம்

டில்லியிலிருந்து நம்மை ஆள்வதைக் குறிக்கும் சொல்தான் ஆவடி!

Best copy available

மகாராஜா 'மேரு' தர்பார்

[ஒரு அரசியல் கற்பனை]

காட்சி 1

[திரை மேலே செல்கிறது. ஒரு வயதான மனிதர் — அவர்தான் மேரு மகாராஜா—சிரசாசனம் செய்து கொண்டிருக்கிறார். சில விநாடிகள் சென்ற பின்னர் எழுந்து நிற்கிறார். பணியாட்கள் அவர் முகத்திலே படர்ந்திருக்கும் வியர்வைத் துளிகளைத் துடைக்கின்றனர். அந்த அறையிலே ஒரு ஆள் உயரத்திற்கு ஒரு பெரிய நிலைக் கண்ணாடி தொங்குகிறது. அங்கங்கே விலை உயர்ந்த கதராடைகள் தொங்குகின்றன. மகாராஜா வியர்வையை கைக் குட்டையால் துடைத்தபடியே...]

மேரு: *அடேய், பாபு! உன்னை எவ்வளவு நேரமாய் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்? எங்கேயடா போயிருந்தாய்?*

பாபு: *மன்னிக்க வேண்டும் மகாப் பிரபு. அம்மா கூட கடைத் தெருவுக்குப் போயிருந்தேன். அதனால்தான் தாமதமாகி விட்டது.*

மேரு: *என் குமாரி வந்து விட்டாளா? பதிப்பிரியா! பதிப்பிரியா! இங்கே வா!*

[மகாராஜாவின் வாஞ்சையுள்ள புத்திரி பதிப்பிரியா வருகிறார்.]

உன்னைக் காணாமல் என் சித்தம் சோர்ந்து விட்டது, கண்ணே! வயதான காலத்தில் என் பக்கத்திலிருந்து பணிவிடை செய்யாமல் எங்கேயம்மா போய் விட்டாய்?

பதி: *இல்லையப்பா! 'மாஸ்கோ தியேட்டர்சி'லே 'பதி—பக்தி' என்று ஒரு நாடகம் நடந்தது. அதைப் பார்த்து விட்டு வரலாமென்றுதான் போயிருந்தேன்.*

மேரு: *என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா? நானும் உன்னோடு வந்திருப்பேன்! ஓ! தர்பாருக்கு நேரமாகி விடுமேயென்று என்னை அழைக்காமல் போய் விட்டாயாக்கும்! சரி; சரி...... டேய் பாபு! உன்னைத் தாண்டா! உன் பெயரை உச்சரிக்காமல் என்னால் ஒரு நொடி கூட உயிர்வாழ முடியாது போல் இருக்கிறதே!*

பாபு: *இதோ வந்து விட்டேன் பிரபூ!*

மேரு: *தர்பாருக்கு நேரமாகி விட்டதடா! மந்திரி பிரதானியரெல்லாம் காத்துக் கொண்டிருப்பார்கள் — உம் ... அகராதியைப் புரட்டினாயா? இன்று வசைமாரி பொழிவதற்கு ஏதாவது வார்த்தைகள் அகப்பட்டதா? சீக்கிரம் சொல்!*

பாபு: *அதைத்தான் பிரபு இந்நேரம் தேடிக் கொண்டிருந்தேன். ஒரு வார்த்தைகூட கிடைக்கவில்லை. அநேகமாக எல்லாவித சாக்கடைப் பதங்களையும் பிரயோகித்துவிட்டோம் மகாப்பிரபு! உபயோகிக்க மறந்துவிட்ட வார்த்தைகளையெல்லாம் அந்த பாழாய்ப் போன சிங்-மன்-ரீ போன்ற சிறுவர்கள் நம்மைத் திட்டுவதற்கே பயன்படுத்தி விட்டார்கள். இப்போது நாம் என்ன செய்வது பிரபூ! மறுபடியும் பழைய வார்த்தைகளையே திருப்பி உபயோகிக்க வேண்டியதுதான்!*

மேரு: *என்னுடைய பரிபாலனத்தில் திட்டுவதற்கு வார்த்தைகள்கூடவா பஞ்சம்! அட, கிரகச்சாரமே! வசைச் சொற்களுக்கு இவ்வளவு சீக்கிரம் இரண்டாவது பதிப்பு வெளியிட்டால் மற்ற நாட்டுத் தலைவர்களெல்லாம் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்! இப்போது நான் என்ன செய்வது...*

[மூக்கிலே விரலை வைத்துக் கொண்டுபலமாக யோசிக்கிறார். ரெடியாக கேமராவுடன் பக்கத்திலே நின்று கொண்டிருந்த வேலைக்காரனொருவன் அந்த 'போஸை' கேமராவுக்குள் திணிக்கிறான். சில நிமிஷங்கள் சென்ற பின்னர் அவரது முகம் மலர்கிறது]

மேரு: *டேய், பாபு! ஓடிப் போய், காம்ரேட் சூ—என்—லாயுக்கு ஒரு அர்ஜெண்ட் டிரங்கால் போட்டு, சீனபாஷையில் திட்டுவதற்கு ஏதாவது வார்த்தைகள் இருக்கிறதா என்று கேள்—நான் கேட்டதாகவே சொல்லு...உம்...போ!*

[பாபு ஓடுகிறான். அதற்குள் ஏதோ நினைத்தபடி, பாபுவை திரும்ப அழைக்கிறார்.]

பாபு: *ஏய், தடியா! நான் தான் ஏதோ சொல்லுகிறேன் என்றால், அதற்குள் நீயும் ஒரே பாய்ச்சலாகப் பாய்கிறாயே! ஏண்டா, பாபு! அவர்கள் நாட்டிலே அரசியல் தலைவர்கள் அநாகரீகமான வார்த்தைகளை உபயோகிக்கமாட்டார்கள் என்பதை மறந்தே போய்விட்டோமே! சூ-என்-லாயைப் போய் சூடான வார்த்தைகளைப் பற்றிக் கேட்டால் என்னுடைய ஆட்சித் திறனைப் பற்றி அவர் என்ன நினைப்பார்! நல்லவேளை! இப்போதாவது ஞானோதயம் பிறந்ததே!...*

(வானத்தை நோக்கியபடி)

...தேவலோகத்திலிருக்கும் பாபுஜி அவர்களே! பூலோகத்திலிருந்துகொண்டு, உம்முடைய பெயரைச் சூடியிருக்கும் இந்த பாபுக்கள் என்னைக் கைவிட்டாலும், நீங்கள்தான் கடைக்கண்பார்த்து எனக்குக் கடாட்சம் தரவேண்டும்-

(கீழே மண்டியிட்டபடி வணங்குகிறார்! அப்போது கையிலே துப்பாக்கி சகிதம் ஒரு சிப்பாய் அவருக்கு 'சல்யூட்' செய்து நிற்கிறான்.)

சிப்பாய். *மகாப்பிரபுவின் தரிசனத்திற்காக தர்பார் ஒரு மணி நேரமாகக் காத்திருக்கிறது!*

மேரு: *இன்னும் ஒரு மணி நேரம் காத்திருக்கட்டும். நான் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருப்பதாகப் போய்ச் சொல்!*

(சிப்பாய் போகிறான். மேரு நிலைக்கண்ணாடியின் முன்னால் உட்காருகிறார். கண்ணாடியில் தன் முகத்தை ஒருமுறை பார்த்துக்கொள்கிறார். உருகி நிற்கும் மெழுகைப் போன்ற வழுக்கைத் தலை ஒளி வீசுகிறது. அந்த நேரம், பாபு கையிலே ஒரு கதர் குல்லாயுடன் வருகிறான். மேரு அதை வாங்கி தலையிலே அணிந்துகொள்கிறார். என்ன விந்தை! குல்லாய் அணிந்தவுடன் அந்த அறுபது வயதுக் கிழவரின் முகம் முப்பத்தைந்து வயது வாலிபனைப் போல 'தேஜஸ்' பெறுகிறது.)

மேரு: *மகளே, பதிப்பிரியா! நீ ரெடியாகிவிட்டாயா! வா, தர்பாருக்குப் போகலாம்!*

(திரை விழுகிறது)

★

காட்சி-2

[மேரு மகாராஜாவின் தர்பார் மண்டபம். சிம்மாசனத்துக்குப் பின்புறத்தில் மகாத்மா காந்தியின் முழு உருவப்படம் ஒன்று இருக்கிறது, அதைச் சுற்றி சிலந்திக்கூடு ஒன்று காணப்படுகிறது. மண்டபத்தின் ஒவ்வொரு தூணுக்கடியிலும் ஒரு சர்க்கா இருக்கிறது. அந்த சர்க்காவின் இரும்புப் பிடிகளெல்லாம் துருப்பிடித்துப் போயிருக்கின்றன; கரையான் அறித்து மக்கி மண்ணாகமாற வேண்டிய நிலையில் இருக்கின்றன. கதராடை அணிந்த ஒரு சீமாட்டி பஜனை கீதம் இசைக்கிறாள். பாட்டு முடிந்ததும் தர்பார் துவங்குகிறது.]

சிப்பாய்: *ராஜாதிராஜ, ராஜகம்பீர, அலகாபாத் வீரர், சீனத்து விருந்தாளி, ஸ்ரீமான் மேரு மகாராஜா, பராக்!*

[காந்தி படத்தை ஒரு முறை பார்த்தபடி மேரு சிம்மாசனத்தில் அமர்கிறார். அவரது பக்கத்தில் ஸ்ரீமதி பதிப்பிரியாவும் அமருகிறார்:]

மேரு: *மந்திரி! நமது மாநிலத்தில் ஜனநாயகமெல்லாம் செவ்வனே நடைபெறுகிறதா?*

உதவி வெளிநாட்டு மந்திரி: *அப்படியே, மகாராஜா! அண்ட சராசரத்திலுள்ள தேசங்கள் அனைத்திற்கும் நம்முடைய பிரதிநிதிகளை அனுப்பியிருக்கிறோம். கோடிக்கணக்கான பொருட்செலவிலே தூதுவராலயங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன! வானளாவிய அந்த கூடகோபுரங்கள், வெளிநாடுகளிலேயெல்லாம் ஏழை இந்தியாவின் பெருமையைப் பற்றியும், எல்லாம் வல்ல மேரு மகாராஜாவின் கீர்த்தியைப் பற்றியும் பறைசாற்றியவண்ணம் இருக்கின்றன, பிரபூ!*

மேரு: *சபாஷ்!*

(அடுத்தபடியாக பாதுகாப்பு மந்திரி தனது ரிப்போர்ட்டுடன் வருகிறார்)

பா. மந்திரி: *(மிலிட்டரி முறையில் சல்யூட் செய்துவிட்டு...) இந்திரஜித்தாலும் ஜெயிக்க முடியாத வண்ணம் நமது படைபலம் பெருகியிருக்கிறது, மகாராஜா! அயல்நாட்டிலிருந்து இன்ஜின் பழுதான அரை டஜன் கப்பல்கள் இப்போதுதான் வரவழைக்கப்பட்டிருக்கின்றன. மகாராஜா மனது வைத்தால், ஒரு மாத காலம் அந்தக் கப்பலிலே சென்று, அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஓய்வு பெற்று வரலாம், பிரபூ!*

மேரு; *அச்சா! எனக்குக்கூட இப்போது ஓய்வு தேவைதான். எங்கு பார்த்தாலும் அயிட்ரஜன் குண்டை வெடித்து சோதனை பார்த்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் கடற்பிரயாணம் தேவையில்லை, மந்திரி! உம்... அடுத்தபடியாக யார்?*

(உணவு மந்திரி ரிப்போர்ட்டுடன் வருகிறார்)

உ. மந்திரி: *மாட்சிமை தங்கிய மகாராஜா அவர்களே! நமது சாம்ராஜ்யத்தின் உணவு நிலைமை யாவும் திருப்திகரமாய் இருக்கின்றன. ஆனால், ஒரே ஒரு குறை பிரபு! அடுத்தமுறை நாட்டில் பஞ்சமோ, அதன் காரணமாக பட்டினிச்சாவோ ஏற்பட்டால் அனாதைப் பிணங்களை அப்புறப்படுத்த நம்மிடம் போதுமான ஆட்களில்லை...*

மேரு: *நான்சென்ஸ்; உடனே ஐசன்ஹோவருக்கு 'போன்' செய்து பிணத்தை அப்புறப்படுத்த பத்தாயிரம் கழுகுகளை அனுப்ப ஏற்பாடு செய்யச் சொல்லும். இதற்கு உடன் ஆவன செய்யாவிட்டால் உடனே பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஓடிவிடும்...*

● தொடர்ச்சி 6-ம் பக்கம்

தலையங்கம்

-ரா-

சென்னை 21—1—55 வெள்ளி

சொல்லிவிடுங்கள்!

"இளமை—ஒரு பெரும் பிழை; நடுவயது—ஒரு பெரும் போராட்டம்; முதுமை ஒரு பெரிய அனுதாபம்"—என்று டிஸ்ரேலி ஒருமுறை சொல்லியிருக்கிறார். இந்த நாட்டு காங்கிரஸ் கட்சியின் வரலாற்றை நோக்கும்போது மேற்கண்ட டிஸ்ரேலியின் வாசகங்கள்தான் நமது நினைவுக்கு வருகின்றன.

ராஜவிசுவாசக் கட்சியாக ஹியூம் துரையால் துவக்கப் பட்டு, இடையிலே நாட்டு விடுதலைகோரும் இயக்கமாக மாறி, பின்னர் பாதை தவறி இப்போது பரிதாபத்திற்குரிய முதுமைப் பிராயத்தை அடைந்திருக்கிறது, காங்கிரஸ் கட்சி!

திலகரும், காந்தியும் அரும்பாடுபட்டு அமைத்த இரும்புக் கோட்டை இன்று துரும்பாகி விட்டது. வரம்பு மீறிய பதவி மோகத்தால், திறனற்ற ஆட்சிமுறையால் இன்றைய காங்கிரஸ் சாறிழந்த சக்கையாகி விட்டது.

அந்த சக்கையிலே சத்தேற்ற நினைக்கும் முயற்சிதான் இன்றைய தினம் 'ஆவடி'யிலே நடைபெறுகிறது. இது காங்கிரஸ் மகாசபையின் அறுபதாவது மாநாடாம்-அறுபதாண்டுக் கிழவன்—சுடுகாட்டுக்குப் போகு முன்னர் சுருதி சேர்த்து சங்கீதம் பழகும் வேடிக்கையைத் தான் நாம் இன்று காணுகிறோம். இந்தக் கிழவனின் ஆட்சியிலே நாம் அனுபவித்த கஷ்டங்கள்தான் எவ்வளவு! வாலிபனாயிருந்தபோது அவன் வெள்ளையனை வீழ்த்தினான். ஆனால் விருத்தாப்பிய பருவத்திலே அவன் மனித வேட்டையல்லவா ஆடத்துவங்கிவிட்டான்!

பாதிக்குதே பசி என்று அழுவோர்—நாதியற்றவர்களாய்—நடுத் தெருப் பிணங்களாய்ச் சாய்ந்து விட்டோர், இந்த நாட்டு மக்கள் தொகையிலே பாதிக்கும் மேலிருக்கும்!

தொல்லைகள் அனுபவிப்போர்—பிள்ளை விற்போர்—பிச்சை எடுப்போர்—இவர்களது தொகை ஏராளம்! ஏராளம்!!

எறும்பு வரிசையைப்போல சுருண்டு போனவர் அணிவகுப்பு நாடாள்வோர் கண்ணெதிரே வலம் வந்தபடிதான் இருக்கிறது—

வயிறு வளர்ப்பதற்கு மானத்தையும் சந்தைப் பொருளாக்கும் மகளிர்கூட்டம் வளர்ந்தபடிதான் இருக்கிறது—

'படமுடியாதினித்துயரம் — பட்டதெல்லாம் போதும்'—என்று கொதித்துக் கிளம்பியோருக்கு காராக்கிரக வாசம்தான் கிடைத்தது. சிறைச்சாலையை திறப்பதும், மூடுவதுமே அந்த வேலையற்றவனின் வாடிக்கையாகி விட்டது!

இத்தனையும் செய்து விட்டுதான் அந்த அநியாயக்காரக் கிழவன் இப்போது ஆவடிக்கு வந்திருக்கிறான்.

அவனது முடியெல்லாம் வெளுப்பேறிவிட்டது; நாடிகள் ஒடுங்கி விட்டன. அந்தக் கிழவன் மீண்டும் எழுந்து நடமாட ஊன்று கோல் ஒன்று அவசியம் தேவை—

காந்தியார் அளித்த 'ராமராஜ்ய'மென்னும் மூக்குக் கண்ணாடியோ முளியாகி விட்டது—ஊன்றுகோல் இல்லாவிட்டால் அவன் வெளியிலே உலவமுடியாது.

இந்த ஆபத்து நிறைந்த வேளையில்தான் மோதிலால் மைந்தர் முதுமைப் பிராயத்தால் அவதிப்படும் காங்கிரசுக்கு ஆதாரக்கோல் ஒன்றை வழங்கியுள்ளார்—

இனிமேல் காங்கிரசின் இலட்சியம் ராமராஜ்யமல்லவாம் — சோஷலிச அமைப்புதான் இனி அதன் குறிக்கோளாம்—

இந்த திடீர் அறிவிப்பு கண்டு நாம் வியப்புக்கடலில் மூழ்கத் தேவையில்லை. காங்கிரஸ்காரர்கள் இந்த சோஷலிசப் பல்லவியையும் பழைய ராமராஜ்ய மெட்டிலேதான் பாடிக்காட்டுகிறார்கள். இதோ விஷயாலோசனைக் கமிட்டியிலே புதிய சோஷலிசத் தீர்மானத்தைப் பிரேரேபித்து அபுல்கலாம் ஆசாத் பேசியதைக் கேளுங்கள் :

"இந்தத் தீர்மானம் காங்கிரசுக்காகட புதிய லட்சியம் எதையும் நிர்ணயிக்கவில்லை... இப்பிரேரனை காரணமாகக் காங்கிரஸ் பழைய பாட்டையிலிருந்து பிறழ்ந்துபோகவில்லை. புதியதொரு கோஷத்தை நாம் கிளப்பியிருப்பதாக எந்த மெம்பராவது எண்ணினால் அந்த கைய எண்ணத்தை மனத்திலிருந்து விலக்கிக்கொள்ள வேண்டும். காங்கிரஸ் அமைப்பு விதியையே இத்தீர்மானத்தின் மூலம் மாற்ற விருப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள். அத்தகைய எண்ணம் துளிக் கூட கிடையாதென உறுதி கூறுகிறேன்"

உள்ளதை உள்ளபடி, மனம்விட்டு பேசிவிட்டார், அபுல் கலாம் ஆசாத்; சாக்கடையிலே சந்தனமணம் வீசமுடியுமென்று நீங்கள் எப்படி எதிர்பார்த்தீர்கள் என்று நம்மை வினவுவதுபோலிருக்கிறது, ஆசாத்தின் பேச்சு!

தடிப்பேறிய கதர்ச் சட்டைகளும், வெளுப்பேறிய குல்லாய்களும் சென்னையை வட்டமிடும் இந்த நேரத்தில் காமராசரின் கடமை யொன்றைப்பற்றி நம்மால் நினைவு கூறாமலிருக்க முடியவில்லை. நேருவின் முன்னைய விஜயத்தின்போது அந்த நாள் பிரதமர் ஆச்சாரியார் அவரிடம் நம்மைப்பற்றி ஏதேதோ புறங்கூறினார். 'நம்மவராம்' காமராஜர் கோலுவிலிருக்கும் இந்த நாளிலும் நேரு வந்திருக்கிறார். அவரோடு இதுவரை சென்னையைப் பார்த்திரா வடக்கத்திய சேட்டுகள் பலர் வந்திருக்கின்றனர். பதவி பாணம் அருந்தி—இன்னும் போதை தலைக்கேறாத தேபரின் முதல் விஜயம் ஆவடி! ஆவடியின் முடிவு கேட்க குருக்ஷேத்திரங்களில் காலங்கழிக்கும் குடியரசுத் தலைவரும் காத்திருக்கிறார்.

கோலோச்சும் காமராசரே! குலக்கல்வி ஒழித்தவரே! நீர் அவர்களிடம் என்ன சொல்லப் போகிறீர்?

வடக்கத்தியரின் சேவடி தொழுது வாழ, நும் சித்தம் ஒப்புகிறதா? காவடி தூக்கி வாழ்ந்த வம்சத்தவரா, நாம்?—எனவே ஆவடிச் சீமான்களிடம் சொல்லுங்கள்; தன்னுணர்வு பெற்று விட்டோர் இந்த மண்ணுக்கு உரிமை கேட்கின்றனர்—என்கிற செதியை அவர்களது காதிலே போடுங்கள்!

தென்னாட்டின் இலட்சியம் விளக்க இது ஒரு பொன்னான வேளை!—காமராசரே! மண்ணாக்கி விடாதீர்கள், இந்த மணியான சந்தர்ப்பத்தை!

சொல்லி விடுங்கள்; திராவிட நாடு திராவிடருக்காக வேண்டுமென்கிற நம்முடைய இதய கீதத்தை, திட்ட வட்டமாக அவர்களிடம் சொல்லிவிடுங்கள்!

★

ஆசிரியர் மு. க. உடல்நிலை

ஆசிரியர் மு. க. அவர்கள் பத்து தினங்களுக்கு மேலாக, கண்ணிலே ஏற்பட்ட வலி குறையாது, எழும்பூர் அரசாங்க கண் வைத்யசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். டாக்டர் முத்தையா அவர்கள் இதுவரை கண்ணிலே மூன்று ஆபரேஷன்கள் செய்திருக்கிறார். இப்போது கண் வேதனை குறைந்திருக்கிறது. ஆனால் இன்னும் இடது கண்ணை சரியாகத் திறக்க முடியவில்லை. விரைவில் குணமாகி விடுமென்றும், நல்ல ஓய்வு தேவையென்றும் டாக்டர் சொல்கிறார். உற்ற நண்பர்கள் வந்து பார்த்துச் சென்ற வண்ணமிருக்கின்றனர்.

புதையல்

★

ஆசிரியர் அவர்களின் உடல் நலக்குறைவு காரணமாக புதையல் தொடர்கதை இந்த வாரம் இடம் பெறவில்லை. இன்னும் இரண்டொரு வாரங்களில், மு. க. அவர்கள் உடல் நலம் பெற்றதும் புதையல் மீண்டும் பழைய பொலிவோடு வெளிவரும்.

31.1.55



அன்று :- வெள்ளையரை வெளியேற்ற விடுதலை விருத்தம் பாடியது.
வெள்ளையனே - வெளியேறு !..
1
இன்று - அதே வெள்ளையரின் காமன்வெல்த் அமைப்பிற்கு வணங்கிப் பணிகிறது.
அன்று - இதர கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து ஏகாதிபத்யத்-தை எதிர்த்தது.
2
இன்று - அதே ஏகாதிபத்ய வழிகளைக் கையாண் அவைகளைச் சுட்டுத்- தள்ளுகிறது.
அன்று - காங்கிரஸ், பாட்டாளிகளின் கூட்டாளி.
3
இன்று - பணக்காரர்களின் பக்க வாத்தியம்.

அன்றும் இன்றும்


அன்று- காங்கிரஸ் வாதிகள் மண் குடிசையிலே வாழ்ந்தனர். இலட்சிய முழக்கமிட்டனர்.
இன்று- மாளிகையிலே வாழ்கின்றனர்; இலட்சம், இலட்சமாக சுருட்டுகின்றனர்.
ராஜ பவன்
4
அன்று- காந்தி மனிதனாக இருந்தார்
இன்று- கடவுளாக்கப் பட்டுவிட்டார்.
பொது மக்கள்.
5
அன்று- நேரு உயர் எண்ணங் கள் மலரும் சோலை.
6
இன்று- கோப, தாபங்கள்- எனும் கள்ளி படர்ந்திருக்கும் பாலை.

எச்சிலின் மகத்துவம்!

★

வரிவேங்கைப் புலி,தனது வாலைத் தூக்கி,
வாய்திறந்து பாயவரின், அதை விரட்ட,
நெருப்பு முடிப் பந்தத்தை எடுத்துக் காட்ட
நினைக்காமல்; வீரத்தை நிலை நிறுத்த,
'வரட்டும்அது; பார்க்கின்றேன்' என்று கூறி.
மங்கையர்கள் எடுக்கின்ற முறமும்; கேணி
உருவுள்ள கூடைகளும்; தடுக்கும்; குன்றின்
ஓரத்தில் வசிக்கின்ற குறத்தி எச்சில்!

* * *

சுவையுடைய ஆவின்பால்; அந்தப் பாலில்
தேங்குகின்ற தித்திப்பு ஆடை! வெள்ளை
அவரைப்பூ போலுள்ள தயிரின் கட்டி;
ஆண்யானைக் கால் நகத்தைப் போல் திரண்டு
சுவைகாட்டி, வலுவூட்டும் வெண்ணெய்க் கட்டி;
தெருவில் விலை போகும்,மோர்; அனைத்தும்—வாயை
அவிழ்க்கின்ற முல்லைப்பூ தன்னைச் சூடி
அலங்காரம் செய்கின்ற இடைச்சி எச்சில்!

* * *

சேல்விழியால், காதலரை இழுத் தடிக்கும்
சிங்கார மங்கையர்கள் உடுத்தும் சேலை;
வேல் எடுத்து, வாள்எடுத்துக், களத்தை நோக்கி
ஓடுகின்ற போர்வீரர் உடுத்தும் ஆடை;
பால்போன்ற பஞ்சாடை; போர்வை; மின்னும்
பட்டாடை, இவையெல்லாம்—அறுந்து போன
நூல்நக்கி, இழைநெருடி, பாவு தன்னை
நெய்கின்ற சேணியரின் நாக்கு எச்சில்!

* * *

தென்னாட்டுக் கொய்யாவை, ஆசை யோடு
தின்றுவரும் கிளிபோன்ற தங்கை; பச்சைப்
புன்னைதரும் வெண்மலர்போல் சிரிப்புக் காட்டிப்,
பார்வைக்குப் புதுஅழகு அளிக்கும் அக்கை;
அன்புள்ள சிறுதம்பி; குடும்பந் தன்னை
ஆதரித்து வரும் அண்ணன்—இவர்கள் எல்லாம்,
இன்பமுடன் மஞ்சத்தில் கொஞ்சிக் கொஞ்சி
இருட்டுதனில் பெற்றோர்கள் செய்த எச்சில்!

* * *

ஓடிவரும் தண்ணீரைக் கடன்கேட் காமல்
வாழ்கின்ற நற்கிணறும்; பள்ளக்
கோடுகளில் ஓடுகின்ற ஆறும்; பெண்கள்
குளிக்கின்ற ஊர்க்குளமும்; சுனையும்; சந்தப்
பாடலொடு கீழ்நோக்கிப் பரவும், வெள்ளைப்
புகைபோன்ற அருவிகளும்; ஏரி நீரும்—
தோடணிந்த பெண்கூட்டம்; கொம்பு மான்கள்;
துள்ளுகின்ற மச்சங்கள், செய்யும் எச்சில்!

* * *

கருவினிலே. மாந்தரெல்லாம் உருவ மாகிக்
காட்சிதரும் உலகத்தில்; தாங்கள் மட்டும்,
பிரம்மாவின் தேற்றயிலே பிறந்ததாகப்
பொய்செல்லும் பார்ப்பனரும்; சாம்பல் பூசிப்,
பரம்—அபரம் எனப்பேசிக் காலந் தன்னைப்
பாழாக்கும் சைவர்களும்--சுட்டுத் தின்று
வருகின்ற கிழங்குண்டே, அக்கி ழங்கை
உண்டாக்கும் பனங்கொட்டைப் பலபேர் எச்சில்!

மகாராஜா......

2-ம் பக்கத் தொடர்ச்சி

உ. மந்திரி: அப்படியே பிரபூ! (நகருகிறார்)

மேரு: எங்கே எனது உள் நாட்டு மந்திரி?

உ. நா. மந்திரி: இதோ வந்து விட்டேன் மகாராஜா! (ரிப் போர்ட்டை விரித்து...) நம் முடைய ஆட்சி காலத்தில் 999 சினிமாப் படங்கள் தடை செய் யப்பட்டிருக்கின்றன. மற்றபடி ஆட்சி அமைதியாய் நடக்கிறது பிரபூ!

மேரு: சபாஷ்! அப்படித் தான் இருக்கவேண்டும்! வேறு ஏதாவது விசேஷங்கள் உண்டா?

உ. நா. ம: உண்டு பிரபூ! சேட் ஷாம் கிஷனின் பத்திரி கையைத் தடை செய்யலா மென்று நினைக்கிறேன்! தங்க ளது ஆணைக்காகத்தான் காத் திருக்கிறேன்.

மேரு; ஆ! என்ன காரியம் செய்தாய்! மந்திரி-மறுமுறை நீ இந்த வார்த்தை சொல்லாதே! சேட் ஷாம் கிஷனை யாரென்று நினைத்தாய்? அவன் என்னு டைய அந்தரங்க நண்பன்! இந்த சிம்மாசனத்தில் ஜொலிக் கிறதே அந்த நவரத்னங்கள் —அவையெல்லாம் அவன் வாங் கிக் கொடுத்ததுதான். அதோ, அங்கே ஊசலாடுகிறதே பாபூ ஜியின் படம்-அதுவும் அவனது அன்பளிப்புதான். அப்பேர்ப் பட்டவனுடன் மோதக் கூடாது, மந்திரி! சேட் ஷாம் கிஷன் கொஞ்சப் பண பாணத் தை வீசினால் நாமெல்லாம் சுடு சாம்பலாகிவிடுவோம்! உடனே இந்த யோசனையை அப்புறப் படுத்தும்; இல்லையேல் உம் மைத் தொலைத்து விடுவேன்; ஜாக்ரதை!

ஆமாம்; அந்தப் பத்திரி கையை ஏனய்யா தடைசெய்ய வேண்டும்?

உ. நா. ம: காருண்யம் மிக்க பிரபு அவர்களே! கொஞ்சம் கோபம் தணியவேண்டும். அந் தப் பத்திரிகாசிரியன் ஒரு தீவிர வாதி. "மேருவுக்குப் பிறகு இந்த ராஜ்யத்தை ஆளுவதற்கு வாரிசு யார்?" என்று தீப் பொறி பறக்கும் கேள்விகளை யெல்லாம் கேட்டு, மக்க ளிடையே பலாத்காரத்தைத் தூண்டிவிடுகிறார், அதன் ஆசிரியர்.

மேரு: (சிறிது யோசித்து...) அந்தப் பத்திரிகை கேட்பதும் வாஸ்தவந்தான்! எனக்குப் பின் இந்த சிம்மாசனத்தில் அமருவதற்கு யார்தான் இருக்கி றார்கள்? என் மகள் பதிப்பிரி யாவோ, ஒன்றுமறியாத சின் னக் குழந்தை. என் சகோ தரி விஜயாவோ ஊர் சுற்று வதிலேயே கண்ணும்கருத்துமா யிருக்கிறாள்! என் மந்திரிகளா கிய நீங்களோ மண் பொம்மை களாயிருக்கிறீர்கள். உங்களால் ஒரு இலாக்காவையே பரிபா லிக்க முடியவில்லை; நீங்கள் எப்படி இந்த சாம்ராஜ்யத்தை கட்டியாளப் போகிறீர்கள்?

(வானை நோக்கி)

...அண்ணல் காந்தியே! நம் வம்சம் என்னோடு அற்றுப் போக வேண்டுமா? இந்தக் காரிருளிலிருந்து என்னை மீட்ப தற்கு நீதான் 'டார்ச்' அடித்து வழிகாட்டவேண்டும்! (தொழுகிறார்)

மது விலக்கு மந்திரி: மகா ராஜா! மதுவிலக்கு கேஸ் ஒன்று தங்களது விசாரணைக் காகக் காத்திருக்கிறது. குற்ற வாளியை அழைத்துவரட்டுமா, பிரபூ?

மேரு: என் ராஜ்யத்தில் இன்னும் மதுவிலக்குக் குற்றங் களா? நான்சென்ஸ்! உடனே அவனை உள்ளே அனுப்புங்கள்!

[குற்றவாளி சூட்டும், ஹேட் டும் அணிந்தபடி உள்ளே வரு கிறான்]

ம. வி. மந்திரி: மதிப்புக்குரிய மகாராஜா அவர்களே! இதோ உங்கள் முன் நிறுத்தப்பட்டி ருக்கும் இந்தக் குற்றவாளி அயல்நாட்டுக்காரன். யாத்ரீக னாய் இங்கு வந்தவன் தப்பித் தவறி கொஞ்சம் சாராயம்

தொடர்ச்சி 7-ம் பக்கம்

"ஆட்டமென்ன சொல்வேன்-பொம்ம லாட்டமென்ன சொல்வேன்!"

★

சௌராஷ்டிர மாநிலத்தின் எல்லைக்கு அப்பால் காலெடுத்து வைக்காத ஒருவர் தான் இமயமுதல் குமரிவரையுள்ள காங்கிரஸ்கட்சியின்ராஷ்டிரபதி!

ஆசியாவின் அறிவுப் பொக் கிஷமாம் ஆசாதும், கவிக்குயில் சரோஜினியும் உட்கார்ந்த ஆசனத்தில், இதுவரையில் 'அட்ரஸ்' தெரியாதிருந்த பேர் வழி அமரப் போகிறார். இதன் ரகசியம் புரியுமா, உங்களுக்கு? அந்த உட்பொருளை விளக்கு வதுதான் இந்தப் படம்!



மலர் மணம் நுகர்ந்தோர்

நா. பாண்டுரங்கன், எம். ஏ.,
புதுக் கல்லூரி, சென்னை.

தமிழர் திருநாள் இவ்வாண்டு தனிச் சிறப்பு பெற்றுவிட்டது—முரசொலி வழங்கிய முழு மலரால்! மலரின் வண்ணச் சித்திரங்கள், காண்போரைச் சிலைகளாக்குகின்றன—எண்ணச் சித்திரங்கள் சிந்திக்க வைக்கின்றன — செந்தேன் குளத்தில் பிடித்துத் தள்ளுகின்றன! முன்னேற்ற இலக்கியச் சோலையில் முடிவுபெறாது ஒலித்துக்கொண்டிருக்கும் பண்ணொலி இந்த 'முரசொலி'!

★

டி. நாராயணன், புரசை.

உங்கள் பொங்கல் மலரைப் பார்த்தேன். 'அவாளு'க்கு நிகராக இருக்கவேண்டும் என விரும்பியதோடு செயலிலும் காட்டி இருக்கின்றீர்கள். மிக்க மகிழ்ச்சி. அப்படியே அவர்களுக்கிடையில் இருப்பதைப் போலவே நமக்குள்ளும் ஒற்றுமையும், கட்டுப்பாடும், இன உணர்ச்சியும், மொழிப் பற்றும் உண்டாகவும் வளரவும் உங்கள் ஏடு அல்லும்பகலும் அயராது உழைக்கட்டும்!

அழகு வண்ண ஓவியத்தை மின்னல் வேகக் கண்கள் சற்றுநேரம் அப்படியே சுவைத்து நின்றன. இந்த அமைப்பில் அண்ணாவின் படம் இதுவரை வந்ததில்லை. 'கம்பன் எழுதியது ராமாயணமா? ராமாயணமா? இராமன் கோழையா? வீரனா?' என்ற கேள்வி எழுந்துள்ள இந்த நேரத்தில், 'தமிழ் நாட்டை இழந்தாலும்இழப்பேன்; கம்பனை இழக்க நான் மனம் ஒப்பேன்' என்று சேலத்தில் அன்று போர்க்கோலம் பூண்ட ச. சோ. பாரதியார் கம்பனின் குறைபாடுகளையும், இராமனின் கோழைத் தனத்தையும் எடுத்துக் கூறி 'இராமன் குற்றமற்றவனா?' என்று சிந்திக்க சொல்லுகிறார், கம்பனைக் கட்டியழும் வம்பர்களை.

"எல்லோரும் கேட்கிறார்கள்" என்பதிலிருந்து 'எமதுஇலட்சியம்' "இலட்சிய பூமி"வரை, "தேவலோகத்து பார்லிமெண்ட்"டிலிருந்து "காலம் மாறினால் நடக்கும் விதம்" வரை, அட்டைப் படத்திலிருந்து "எட்டாவது அதிசயம்" வரை, எழில் மிக்க ஓவியங்களையும் தாங்கி வந்து.

'அவாள்' கையிலே இருந்த திரை உலகத்தை நாம் கைப்பற்றினோம்.

'அவாள்' ஆதிக்கத்திலிருந்த மேடையை நாம் நமதாக்கிக் கொண்டோம்.

'அவாள்' ஏகபோக உரிமையாக இருந்த பத்திரிகை உலகத்திலும் நாம் வெற்றிக் கொடி பறக்க விடுகிறோம்.

அதற்கு அறிகுறிதான் முரசொலி 'பொங்கல் மலர்'

சேகர். சென்னை—10

புத்தகப் பண்ணை,
தேவக்கோட்டை.

மலர் கிடைத்தது. மகிழ்வு. மலர் அபாரம்—அபாரம்!

★

க. சிதம்பரம், புரசை.

திராவிடர் பத்திரிகை பொங்கல் மலர் வானில், புதியதோர் திங்களாக, மலர்க் காட்டை மருவி வரும் தென்றலாக, இன உணர்ச்சி பெற்றுவரும் திராவிட மக்களின் எழுச்சி முரசமாக முரசொலி பொங்கலன்று வந்து திராவிடரின் கரங்களிலே தவழ்ந்தது. முரசொலியே இன்பப் பொங்கலாக இருந்தது. திராவிட மக்களின் கண்கள் (பெரியார் — அண்ணா) ஊடுருவிச் சென்று உள்ளத்தில் பதிந்துவிட்டது. அண்ணாவின்

திராவிடர் இல்லந்தோறும் பொங்கலன்று மலர்ந்து மணம் பரப்பி மகிழ்வித்தது "பொங்கல் மலர் முரசொலி"! இத்தகைய மலரை திராவிடர்க்கு படைத்து மகிழ்வித்தமைக்கு என் அன்பு கனிந்த வணக்கம்.

★

என். எஸ். சண்முகவடிவேல்,
தஞ்சை.

இன்று காலை மலர் வந்து என் விழிகளை விரித்தன. பொங்கல் மலரில் இன்பம், இனிப்பு, மணம், எல்லாம் சேர்த்து பொங்குகிறது. அருமையான முயற்சி! எதிரிகளுக்கு ஓர்பாடம் நாமும் தயார் செய்ய முடியும் என்பதற்கு.

[தொடரும்]

மகாராஜா......

○ 6-ம் பக்க தொடர்ச்சி

குடித்துவிட்டான். திறமை வாய்ந்த நம்முடைய போலீசாரிடமிருந்தா இவன் தப்ப முடியும்? உடனே அவனைப் பிடித்து வந்துவிட்டார்கள், பிரபூ! தீர விசாரித்து தக்க தண்டனை தாருங்கள்!

மேரு; *மிஸ்டர் அக்கியூஸ்டு! உம்முடைய 'ஸ்டேட்மெண்ட்' என்ன? சீக்கிரம் சொல்லும்!*

குற்றவாளி: *மகாராஜா! நான் வெளிநாட்டுக்காரன். எனக்கு உங்கள் நாட்டு கலாசாரம் தெரியாது; சட்டமும் தெரியாது; ஆட்சிமுறைகூட தெரியாது! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும் பிரபூ!*

மேரு: *வாட்! என்னுடைய ஆட்சி முறையைப் பற்றி 'மான்செஸ்டர் கார்டியனி'ல் நீர் படிக்கவில்லையா? 'நியூயார்க் டைம்சி'ல் நீர் பார்த்ததில்லையா? வேடிக்கை! வேடிக்கை! உமக்கு கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும்.*

குற்றவாளி: *கொஞ்சம் கருணை வையுங்கள் மகாராஜா! அடியேனை மன்னித்துவிடுங்கள், பிரபூ!*

மேரு: *முடியாது! முடியாது! உமக்குக் கடுமையான தண்டனையொன்று தரப்போகிறேன். நரகலோகத்தில்கூட நீ அனுபவிக்க முடியாதபடி, புதிய தண்டனையொன்று தரப்போகிறேன். அயல் நாட்டிலிருந்து இங்கு வந்து குற்றம் புரிந்த கயவனே! என்னுடைய தண்டனையை ஏற்றுக்கொள்ள உன் மனதை தைரியப்படுத்திக் கொள்...*

[சபையில் ஒரே மௌனம்]

இந்தா, தண்டனை — பிடித்துக்கொள். **இன்று முதல் இன்னும் பத்து ஆண்டு காலம் வரை நீ என்னுடைய ஆட்சிக்குட்பட்ட இந்த சாம்ராஜ்யத்திலேயே வாழ வேண்டும்.**

குற்றவாளி: *அய்யகோ! மரண தண்டனையைக்கூட தாங்கிக் கொள்வேன்; ஆனால் இந்த தண்டனையை என்னால் தாங்க முடியாது மகாராஜா... நான் மேல் நாட்டில் வசித்துப் பழக்கப்பட்டவன்; கருணை வையுங்கள் பிரபூ!*

மேரு: *உஸ்......சப்தம் போடாதே! என்னுடைய 'ஜட்ஜ்மெண்டை' முழுதும் படித்து முடித்தவுடன் நீ பேசலாம்...*

மேற்படி தண்டனை காலத்தில் நீ மேலும் குற்றம் புரிந்தாயானால் மேற்கொண்டு இரண்டு வருஷ காலத்திற்கு, அன்றாட செய்தித்தாளில் வரும் என்னுடைய பேச்சுகள் முழுவதையும் கொஞ்சம்கூட விடாமல் படித்துத் தீரவேண்டும்... உம்...மந்திரிமார்களே! நிறைவேற்றுங்கள், நான் கொடுத்த தண்டனையை!

[குற்றவாளி கொண்டு செல்லப்படுகிறான். மேரு சிம்மாசனத்திலிருந்து எழுகிறார். சபையோரும் எழுகின்றனர். அதுவரை சபையிலே தூங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு ஒரு 'கப்' டீ வழங்கப்படுகிறது!]

மேரு: *மாட்சிமை கொண்ட பாரத் வருஷத்தின் பிரதிநிதிகளே! இந்த நாட்டின் முடிசூடா மன்னன் என்கிற முறையிலே நான் பேசத் துவங்குகிறேன்!*

என்னுடைய முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி பத்திரிகைகள் மூலமாகவும், ரேடியோ வாயிலாகவும் கேள்விப்பட்டிருப்பீர்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் அடைய முடியாத பலன்களை நாம் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் அடையலாம்; 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நிறைவேறாத சாதனைகளை 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நாம் சாதித்துவிடலாம்; 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் சாதிக்க முடியாதவைகளை 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் 'சாதித்துவிடலாம்!

(சபையிலே ஒரே கைதட்டல்; மேலும் மேலும் கைதட்டல்! ஒரே ஆரவாரம்!)

(அப்போது சிப்பாய்கள் சிலர் வயிறு இறைக்க இறைக்க ஓடி வருகிறார்கள்,)

சிப்பாய் 1: *மகாராஜா! மகாராஜா! கையிலே கோலுடன் பல் முழுதும் போன கிழவர் ஒருவர் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்!*

● தொடர்ச்சி 8-ம் பக்கம்

கடைசிப்பக்கம்

முக்கிய அறிவிப்பு

பொங்கல் திருநாளை முன்னிட்டு சென்ற கிழமை நமது அச்சகத் தொழிலாளர்களுக்கு விடுமுறையாதலால், இந்த வார 'முரசொலி' எட்டு பக்கங்களுடன் வெளிவருகிறது. அடுத்த வாரம் முதல் எப்போதும் போல பன்னிரண்டு பக்கங்களுடனும், புதுச் சிறப்புகளுடனும் 'முரசொலி' வெளிவரும்.

ஆறுமுகம்; தூத்துக்குடி.

(?) பொங்கல் விழா வன்று சென்னையில் நடைபெற்ற 'கயிறு இழுப்பு'ப் போட்டியில் நடிகத் தோழர்கள் ஜெயித்து விட்டார்களாமே!

அப்படியல்ல நண்பரே! நடிகத் தோழர்கள் ஜெயிக்க வில்லை—"(புதுமை) நாடகத் தடைச் சட்டம் பற்களை நீட்டிக் கொண்டு பாய வருகிறது; அதன் கழுத்தை நெறிக்கும் பாசக் கயிறு, இதோ இருக்கிறது பெற்றுக் கொள்ளுங்கள்"-என்கிற அறவுரையுடன அண்ணா தான் கயிற்றை அவர்களிடம் தந்திருக்கிறார். நடிக நண்பர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக் கொள்ளாவிட்டால் 'கயிற்றை' திருப்பவும் அண்ணா அவர்களே பெற்றுக் கொள்வார்!

கோவிந்தன்; மாயூரம்.

(?) இப்போது சென்னையில் நடக்கும் காங்கிரஸ் மாநாட்டிற்கும், முன்பு இதர இடங்களில் நடந்த காங்கிரஸ் மாநாடுகளுக்கும் உள்ள வித்யாச மென்ன!

முன்னைய மாநாடுகளில் 'ராம ராஜ்யத்தை'ப் பற்றி கதையளந்தார்கள்; அந்தப் பெயர் பொது மக்களுக்கு புளிப்பு தட்டியதும், இந்த மாநாட்டில் அதை மாற்றி அமைத்து, 'சோஷலிச சாம்ராஜ்யம்' என்று பேசுகிறார்கள்! இவ்வளவுதான் வித்யாசம்—மற்றபடி வழக்கம் போல அந்த ஆட்டு மந்தையை நேருதான் ஓட்டிச் செல்கிறார்!

சுந்தரம்; முகவை.

(?) ஜீவானந்தம் கடவுள் பக்தி யுள்ளவரா?

ஆமாம்; 'ராமமூர்த்தி' தான் அவர் வணங்கும் கடவுள்!

தண்டபாணி; ராயப்பேட்டை

(?) "சகுந்தலையின் பதிக்கிரக யாத்திரையைப் போல் நான் இப்போது சென்னைக்குச் சென்று கொண்டிருக்கிறேன்"-என்று தேபர் பம்பாயில் பேசியுள்ளாரே; அதுபற்றி தங்கள் கருத்தென்ன?

அவர் சொன்னது உண்மை தான், நண்பரே! இப்போது காங்கிரசைப் பொறுத்த வரையில் ஒரு புதிய சாகுந்தல நாடகம்தான் நடைபெறுகிறது. புராணகால சகுந்தலா துர்வாச முனிவரின் சாபம் காரணமாக துஷ்யந்தனால் கைவிடப்பட்டு கடுந்துயரத்துக்காளானாள். இந்த நவீனகால காங்கிரசென்னும் சகுந்தலையோ, காந்தியாரிட்ட சாபத்தால் அல்லல் படுகிறாள்; பொதுமக்கள் என்கிற துஷ்யந்தன் அவளைப் பற்றிய நினைவையே இழந்து விட்டான்!

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்—காளிதாசனின் கதையைப் போல் அல்லாது, இந்த சாகுந்தல நாடகத்தின் கடைசிக் கட்டம் சோகத்தில் தான் முடிவு பெறும்!

லட்சுமணன்; நாகை.

(?) சூ—என்—லாய் 1931-ம் ஆண்டு கொலைக்குற்றத்துக்காக போலீசாரால் தேடப்பட்டதாகவும், அப்படிப்பட்ட கொலைகாரர் ஆட்சிபுரியும் சீனநாடு எப்படியிருக்குமென்றும் என் நண்பர் ஒருவர் கேட்கிறார். இதற்கு நீர் என்ன சொல்கிறீர்!

உன் நண்பர் கூறுகிறபடி சீனவிலே கொலைகாரன்—திருந்தி, பின்னர் கொலு மண்டபத்துள் நுழைந்திருக்கிறான் —

ஆனால்; ஈவு இரக்கமின்றி பொதுமக்களைச் சுட்டுத் தள்ளும் பட்டம் தாணுப்பிள்ளைகளும், ராஜ கோபாலாச்சாரியர்களும நிறைந்த இந்த நாட்டில் கோலோச்சுபவர்களல்லவா கொலை செய்கிறார்கள்!

ராஜதுரை; தி. நகர்.

(?) ஆவடியில் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

இது தெரியாதா? ஐந்து நிமிஷத்தில் ஆயிரத்தைந்நூறு இட்லிகளுக்கு மேல் சுட்டு அடுக்குமாமே, ஒரு இயந்திரம்; அதை பரீட்சித்துப் பார்க்கப் போகிறார்கள்!

°° °°

ஏன் மறந்தீர்?...

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

தயார்!' என்று மார்தட்டிச் சொன்னாளாம்! அந்த வீராங்கனையின் முழு சரிதை இன்னும் விவரமாக நமக்குக் கிடைக்கவில்லை. 'இந்தியா உள்ளவரையில் வள்ளியம்மையின் பெயர் இந்திய சத்யாக்ரக வரலாற்றிலே நிலைத்திருக்கும்''—என்று மட்டும் காந்தியார் தம் சரித்திரத்தில் எழுதிவைத்திருக்கிறார்.

இந்தியா உள்ளவரையில் கல்லின்மேல் எழுத்தாக நிலைத்திருக்க வேண்டிய அந்தத் திருநாமம், 'ஏக இந்தியா' என்ற வேஷம் கலையுமுன்னர் காந்தியாரின் பிரதம சிஷ்யராம் நேரு உயிரோடிருக்கும்போதே, நீர்மேல் குமிழியாக மறைந்து விட்டது. புறநானூற்றின் வீரம் கப்பியிருக்கும் பொன்னேடுகளை நினைவுக்குக் கொண்டுவரும் அந்தப் பைந்தமிழ்ப் பூங்கொடியைப் பற்றி தென்னாட்டுத் தேசியத் தோழர்களாவது ஒருமுறை சிந்தித்தார்களா?

ஆவடியிலே கூடாரமடித்துத் திருநாள் கொண்டாடும் திருவாளர்கள் இந்தப் புலிக்குட்டியின் பெயரையல்லவா பந்தலுக்குச் சூட்டியிருக்க வேண்டும்! செய்தார்களா இவர்கள்!

தியாகத்தின் சிகரமாய்—மங்கையருள் திலகமாய்த் துலங்கும் இந்த மறத்தியின் பெயரை மறந்து, வியாசமா முனிவரின் வம்சத்துள் ஒருவரின் பெயரை வைத்து 'சத்யமூர்த்தி நகர்' என்று ஆவடிக் கிராமத்தை ஏன் அழைக்க வேண்டும்?

காரணம் காட்ட முடியுமா இவர்களால்?

அக்ரகாரபுரிக்கு ஆரத்தி எடுக்கும் வக்ரமூளைக்காரர்கள், 'இந்தியா உள்ளவரை வள்ளியம்மையின் பெயர் நிலைத்திருக்கும்'—என்ற காந்தியாரின் வாசகத்துக்காவது உயிரூட்ட முன் வந்திருக்கலாம். காந்தியாரையே மறந்துவிட்டவர்கள், அவரது வார்த்தைக்கா மதிப்புதர போகிறார்கள்?

அய்யகோ! வள்ளியம்மையே!

நீ சத்தியமூர்த்தி அய்யரின் பேரக் குழந்தையாய் பிறந்து உயிரோடிருந்திருந்தால் விமான நிலையத்தில் இறங்கியதும் மோதிலால் மைந்தர் உன்னையோ உன் உறவினரையோ தட்டிக் கொடுத்திருப்பார்!

நீ சீனிவாச அய்யரின் புத்திரியாயிருந்து, உனக்கும் ஒரு மகள் இருந்தால், அவள் இந்நேரம் ஆவடிக் காங்கிரசின் வரவேற்புக்குழு தலைவியாகியிருக்கலாம்!

பரிதாபத்துக்குரியவளே! நீ தென்னாட்டில் பிறந்தாய்; இந்திய உபகண்டத்து வரலாற்றில் இடம் பெற்றாயில்லை!

நீ தமிழ்க் குமரியாய் வாழ்ந்தாய்-தென்னாட்டில் கூடும் ஒரு மாநாட்டு பந்தலை உன் பெயர் இட்டு அழைக்கப்பட வேண்டிய மதிப்பையும் இழந்தாய்!

★

மகாராஜா......

★ 7-ம் பக்க தொடர்ச்சி

சிப்பாய் 2: *அந்தக் கிழவர் இடையிலே நான்கு முழத் துண்டுதான் உடுத்தியிருக்கிறார், மகாராஜா!*

சிப்பாய் 3: *அந்தத் தாத்தா மிகவும் கோபமாயிருக்கிறார், பிரபூ! அவருக்குப் பின்னால் ஒரே பட்டினிக் கூட்டமும் நிற்கிறது, பிரபூ!*

சிப்பாய் 4: *அவர் வந்து நிற்கும் காட்சி, பாண்டியன் நெடுஞ்செழியனின் அவைக்கு கண்ணகி வந்து நின்றதை நினைவுறுத்துகிறது, மகாராஜா!*

சிப்பாய் 5: *அந்தக் கிழவர் பாபூ காந்தியைப் போல் இருக்கிறார், பிரபூ! அவர் மார்பிலே இரத்தம் வழிந்தபடி இருக்கிறது, பிரபூ!*

மேரு: *ஆ! பாபூஜியா? இந்த நேரத்திலா?*

[சபையோர்களிடையே ஒரே ஆரவாரம்—ஒவ்வொருவர் முகத்திலும் பயமும், பீதியும் காணப்படுகிறது,]

மேரு: *[சபையோரைப் பார்த்து] மண்பொம்மைகளா! ஏன், உட்கார்ந் திருக்கிறீர்கள்? ஓடுங்கள்! ஓடுங்கள் ... பதிப்பிரியா!*

[காந்தியாரின் ஆவி சபாமண்டபத்துக்கு வருகிறது. சபை அலங்கோலப் படுகிறது. எல்லோரும் தலைதெறிக்க ஓடுகிறார்கள். திரை விழுகிறது]

★

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்படுகிறது. அலுவலகம்;4-128. மவுண்ட்ரோடு. சென்னை—6.